**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.831/2022**
**Prosecution Witnesses: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **விஜய்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **நரசிங்கம்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(06.11.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் வளையங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சந்திரா எனது அம்மா ஆவார். கடந்த 02.01.2022 அன்று மதியம் 2.15 மணியளவில் நானும் எனது அம்மாவும் இருசக்கர வாகனத்தில் TN 58 AH 8032 என்ற இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட எனது அம்மா சந்திரா பின்னால் அமர்ந்து கொண்டு மாட்டுதாவணி ரிங்ரோடும் கப்பலுர் ரிங்ரோடும் சேரும் இடத்தில் உள்ள கருப்பசாமி கோவில் அருகே கப்பலுரை நோக்கி நாங்கள் சென்று கொண்டிருந்த போது தண்ணீர் வினியோகம் செய்யும் டாடா ஏசி என்ற லாரியானது எங்களுக்கு பின்னால் வேகமாக வந்து நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை இடித்துதள்ளிவிட்டு எங்களை முந்தி இடதுபக்கமாக சென்றது. இருசக்கர வாகனத்தில் இருந்த நாங்கள் இருவரும் வலதுபுறமாக கீழே விழுந்துவிட்டோம். எனக்கு வலது கையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. எனது அம்மா கீழே விழுந்ததில் அவருக்கு காதில் இருந்து இரத்தம் வந்தது. அவர் மயங்கிவிட்டார். எங்கள் மீது மோதிய லாரியானது

விபத்து ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது. எனவே நான் லாரி ஓட்டுனரை நான் பார்க்கவில்லை. நெடுஞ்சாலை ஆம்புலன்சு மூலமாக எனது அம்மாவை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். 2 நாட்கள் சிகிச்சையில் இருந்த எனது அம்மா 04.01.2022 அன்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்து சம்பந்தமாக நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகார் வாக்குமூலத்தை நான் சொல்ல சொல்ல காவலர் எழுதினார். நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். விபத்து ஏற்படுத்தியவர் தினேஷ் என பின்னர் கேள்விபட்டேன். நான் எனக்கு ஏற்பட்ட காயத்தை மேற்படி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் மண்டேலா நகரில் இருந்து கரூர் செல்வதற்காக வடக்கிலிருந்து தெற்காக கப்பலூர் நோக்கி சென்று கொண்டிருந்தேன். சம்பவம் நடந்த பகுதியானது நான்கு ரோடுகள் ச ந்திக்கும் பகுதி என்றால் சரியல்ல. அது டி ஜங்சன். நான் மண்டேலா நகரில் இருந்து நேரடியாக வந்து அருப்புக்கோட்டை பிரிவில் இடதுபக்கமாக திரும்பி எனது ஊருக்கு செல்லலாம் என்றால் சரிதான். ஆனால் நான் நேராக சென்றால் கப்பலூர் சென்று கரூர் செல்லலாம். எனக்கு முன்பாக சென்ற வண்டி டாடா ஏசி தண்ணீர் வண்டி என்றால் சரிதான். தண்ணீர் ஏற்றிக் கொண்டும் செல்லும் டாடா ஏசி வாகனம் 20 கி.மீ வேகத்தில் தான் செல்லமுடியும் என்றால் சரியல்ல. ஆனால் அன்று வண்டி வேகமாக வந்தது. நான் வளையங்குளத்திற்கு செல்வதா அல்லது கரூருக்கு செல்வதா என்று நினைத்து திடிரென வளைவில் நின்றுவிட்டேன் என்றால் சரியல்ல. டாடா ஏசி வாகனம் எனது வண்டிக்கு பின்னாடி வரவில்லை என்றாலும் எனது வண்டிக்கு இடதுபுறமாக வந்து எதிரியின் வாகனத்தை இடதுபுறமாக வந்து முந்தி செல்லும் போது தான் விபத்து என்றால் சரியல்ல. எனது வ ண்டிக்கு கீழே விழுந்த கீறளை தவிர வேறு எந்த சேதமும் இல்லை என்றால் சரிதான்.

அதனால் தான் எனது வண்டிக்கு எவ்வித சேதமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. விபத்து நடந்தவுடன் நான் மருத்துவமனைக்குசென்றுவிட்டேன் என்றால் சரிதான். அங்கு போலிசார் என்னிடம் காயத்தை குறித்து எழுதிக்கொண்டனர். நான் புகாரில் கையெழுத்து போட்டேன். புகாரை நான் படித்து பார்த்தேன். நான் மருத்துவமனையில் இருந்த போது போலிசார் விசாரித்த பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. அதற்கிடையில் காவல் நிலையம் செல்லவில்லை. எதிரியின் விபரத்தை நான் மதுரை மோட்டார் வாகன விபத்து இழுப்பீடு கோரும் வழக்கில் விசாரணையின் போது தெரிந்துகொண்டேன். இந்த விபத்தானது என்னுடைய கவனக்குறைவின் காரணமாக ஏற்பட்டது என்றாலும் நான் தான் கவனக்குறைவாக நான்குசந்திப்பு பகுதியில் வலதுபுறமாக முந்திசெல்வதற்கு பதிலாக இடதுபுறமாக முந்தி சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் எனது வாகனத்திற்கு எவ்வித சேதமும் இல்லை என்றால் சரியல்ல.
**மறுவிசாரணை** இல்லை.